Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 02 2025

புதன்கிழமை 02, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 274 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE




## கேஸ் விலையில் மாற்றம் இல்லை

ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எந்த திருத்தமும் ஏற்படாது என்று லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் மற்றும் லாஃப்ஸ் கேஸ் நிறுவனம் ஆகியன செவ்வாய்கிழமை (01) அன்று அறிவித்துள்ளன.

அதன்படி, 12.5 கிலோகிராம் உள்நாட்டு லிட்ரோ காஸ் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 3,690 ஆகவும், 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.1,482 ஆகவும் இருக்கும்.

2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 694 ஆகவும் மாறாமல் உள்ளது என்று நிறுவனம் உறுதிப்படுத்தியது.

நடைமுறையில் உள்ள எரிவாயு விலை நிர்ணய பொறிமுறையின் கீழ் நிறுவனத்தின் வழக்கமான மாதாந்திர விலை மதிப்பாய்வைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கஹவத்தையில் கடத்திச் சுட்டதில் இளைஞன் பலி: இளைஞன் காயம்



கஹவத்த, யாயின்ன பகுதிக்கு திங்கட்கிழமை (30) இரவு 9 மணியளவில் சென்ற இனந்தெரியாத நால்வர், இளைஞர்கள் இருவரை ஜீப் வாகனத்தில் கொஸ்கெல்ல பிரதேசத்திற்கு கடத்திச் சென்று அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வர்த்தக வரி விதிப்புக்கான
# காலக்கெடு நீட்டிக்காது
### ட்ரம்ப் அதிரடி

அமெரிக்காவில் எந்த நாடுகள் வேண்டுமானாலும் வர்த்தகம் செய்யலாம். ஆனால், அதற்கு 25% அல்லது 30% அல்லது 50% அல்லது 10% என வரி செலுத்தவேண்டி இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

பிற நாடுகள் மீதான வர்த்தக வரி விதிப்புக்கான 90 நாள் காலக்கெடுவை நீட்டிக்கப்போவதில்லை எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது முறை அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே வர்த்தக வரி மாற்றம் குறித்து பேச ஆரம்பித்த ட்ரம்ப், 57 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருட்கள் மீது 25% முதல் 50% வரி விதித்து உலக நாடுகளிடையே பதற்றத்தை ஏற்படுத்தினார்.

இதற்கு எதிர்வினையாற்றிய சீனா மீது 125% வரி விதிக்க, அது வர்த்தக போராக பார்க்கப்பட்டது. ஆனால், சீனாவின் அரிய வகை உலோகங்களின் ஏற்றுமதிக்கு அந்நாடு தடை விதிக்கவே, வரியில் சிறு தளர்வை ட்ரம்ப் அறிவிதுள்ளார்.

அமெரிக்கா விதித்திருக்கும் வரி குறித்த ஒப்பந்தங்களில் இந்தியா, சீனா, கனடா உட்பட அனைத்து நாடுகளும் கையெழுத்திடுவது குறித்து பேச்சு வார்த்தை நடத்த, 90 நாட்கள் காலக்கெடுவை விதித்திருந்தார்.

அந்த கெடுவானது எதிர்வரும் 9ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த கெடுவானது நீட்டிக்கப்படும் என்று வொஷிங்டன் அதிகாரிகள் தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், அதற்கான அவசியமில்லை என்று ட்ரம்ப் பேட்டியளித்துள்ளார்.

ஜூன் 27ஆம் திகதியன்று அவர் ஃபாக்ஸ் செய்தி சேனலின் 'சண்டே மார்னிங் ஃப்யூச்சர்ஸ்' என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளார்.

அப்போது, அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு முடிவுக்கு வருவதாகவும், அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் அந்தந்த நாடுகளுக்கு வர்த்தக அபராதங்கள் விதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், காலக்கெடு முடிவடைவதற்கு முன்பே இதுகுறித்த கடிதங்கள் வெளிவரத் தொடங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பேட்டியில், "எந்தெந்த நாடுகள் எங்களிடம் எப்படி நடந்துகொள்கிறது என்பதை பார்ப்போம். குறிப்பாக, நல்லவிதமாக நடந்துகொள்கிறதா அல்லது மோசமாக நடந்துகொள்கிறதா என்பதை பார்த்து அதற்கேற்ப வரியின் அளவையும் நிர்ணயிப்போம். அமெரிக்காவில் எந்த நாடுகள் வேண்டுமானாலும் வர்த்தகம் செய்யலாம். ஆனால், அதற்கு 25% அல்லது 30% அல்லது 50% அல்லது 10% என வரி செலுத்தவேண்டி இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, 90 நாட்களில் 90 வர்த்தக ஒப்பந்தங்களை எட்டுவதை இலக்காக வைத்து செயல்பட்டு வருவதாக கூறினார். இதனால் 200 நாடுகளிடையே 90 நாட்களில் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவதும், தனித்தனி ஒப்பந்தங்களை உருவாக்குவதும் மிகவும் கடினம் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

உலக நாடுகளுடனான வர்த்தகம் தவிர, சீனாவுடனான டிக்டாக் ஒப்பந்தம், மற்ற வணிக உறவுகள் குறித்தும், ஈரான் மீதான தாக்குதல்கள் குறித்தும், அமெரிக்காவில் பிற நாட்டினர் குடியேறுவதும் குறித்தும் தனது கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்த வரியை பொருத்தவரை இந்தியா மீது 26% வரி விதித்திருக்கிறது அமெரிக்கா. ஒப்பந்த பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு விரைவில் முடிவடையவுள்ள நிலையில், இந்தியா - அமெரிக்க இடையே இதுவரை எந்தவிதமான சமரச பேச்சுவார்த்தைகளோ அல்லது ஒப்பந்த கையெழுத்தோ நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## எலும்புக்கூடுகளை
## AI ஊடாக உருமாற்றினால் சட்ட நடவடிக்கை



யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகளுக்கு மாற்றீடான செயற்கை நுண்ணறிவு (AI) புகைப்படங்களைச் சமூக வலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் பரப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அதை மீறிப் பரப்புபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "கேபிளால் கழுத்தை நெரித்து கொலை செய்தோம்"

"வீடு கட்டும் ஒப்பந்தத்தை ஒப்படைக்க வர்த்தகரை அழைத்துச் சென்று, அவரை ஒரு கேபிளால் கழுத்தை நெரித்து, அவர் அணிந்திருந்த தங்க நகைகளையும், அவர் வைத்திருந்த தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடிக்கவே இந்தக் கொலையைச் செய்தோம்," என்று குருநாகல் வர்த்தகர் கொலையில் முக்கிய சந்தேக நபராகக் கூறப்படும் 29 வயது இளைஞர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருடப்பட்ட சொத்துக்களில், 4.8 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள், 1.4 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பணம் மற்றும் ஒரு மொபைல் போன் ஆகியவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டம் மில்லாவ பகுதியில் ஜூன் 25 ஆம் திகதி அன்று வர்த்தகர் ஒருவரை கடத்தி, கழுத்தை நெரித்து கொலை செய்து,

தொடர்ச்சி P2

## "அமெரிக்காவுடன் பேசிய ஒரே ஆசிய நாடு இலங்கை"

உலகளாவிய வரி தொடர்பாக அமெரிக்காவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரே ஆசிய நாடு இலங்கை என்று பொருளாதார அபிவிருத்தி துணை அமைச்சர் அனில் ஜெயந்த தெரிவித்தார்.



அரசாங்கத்தின் நிதி மூலோபாயம் குறித்த பாராளுமன்ற விவாதத்தின் போது பேசிய ஜெயந்த, இந்த ஆண்டு தொடக்கத்தில் விதிக்கப்பட்ட 44% வரி தொடர்பாக அமெரிக்காவுடன் மிகவும் சாதகமான ஒப்பந்தத்தைப் பெற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## அம்மாவுக்காக மகள் பிணை மனு



ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பணிபுரியும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான வைத்தியர் மகேஷி சூரசிங்க விஜேரத்னவின் மகள், தனது தாயாரின் சார்பாக பிணை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணை ஜூலை 4ஆம் திகதி முன்னெடுக்கும்போது, விண்ணப்பம் தொடர்பான சமர்ப்பணங்களை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, செவ்வாய்க்கிழமை (01) அன்று உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன்னிலையாகியுள்ளார்.

## தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா இடைநீக்கம்




தாய்லாந்தின் பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை பதவி நீக்கம் செய்யக் கோரும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், அரசியலமைப்பு நீதிமன்றத்தால் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவரை பதவி நீக்கம் செய்யக் கோரி 36 செனட்டர்கள் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் பரிசீலித்து வரும் நிலையில் இந்த இடைநீக்கம் நடைபெற்றுள்ளது.

கம்போடியாவின் முன்னாள் தலைவர் ஹுன் சென்னுடனான கசிந்த உரையாடல் தொடர்பாக ஷினவத்ரா நேர்மையற்றவர் என்றும் நெறிமுறை தரங்களை மீறியதாகவும் செனட்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவரது இடைநீக்கத்தைத் தொடர்ந்து, தாய்லாந்து அரசாங்கம் ஒரு துணைப் பிரதமரால் பராமரிக்கப்படும். ஷினவத்ரா மீதான வழக்கு தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் நிலுவையில் உள்ளது.

இருப்பினும், சமீபத்திய அமைச்சரவை மாற்றத்திற்குப் பிறகு அவர் புதிய கலாச்சார அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

தொடர்ச்சி P2

## எரிபொருள்களின் விலைகள் அதிகரித்தாலும்
## "போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்காது"

### டீசல்- 289 ரூபாய், மண்ணெண்ணெய்-185 ரூபாய் பெற்றோல்-305 ரூபாய்



எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, போக்குவரத்து கட்டணங்களில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படமாட்டாது என, பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை தனியார் பஸ்களின் கட்டணங்கள், ஓட்டோக்களின் கட்டணங்கள், பாடசாலை வேன்கள் மற்றும் பஸ்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என அந்தந்த போக்குவரத்து சங்கங்கள் அறிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

## நிஷாந்தவுக்கு விளக்கமறியல்



இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் (CIABOC) கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்கவை ஜூலை 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிபதி தனுஜா லக்மாலி ஜெயதுங்க உத்தரவிட்டார்.

அவரது பதவிக் காலத்தில் விமானக் கொள்முதல் தொடர்பான விசாரணை தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

## சஷிக்கு எதிரான வழக்குக்கு திகதி குறிப்பு



போலி பிறப்புச் சான்றிதழைக் காட்டி, முறையற்ற வகையில் இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றதாகக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவிற்கு எதிரான வழக்கின் சாட்சியங்களை நவம்பர் 11ஆம் திகதி விசாரிக்க கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷனா கெகுனுவெல செவ்வாய்க்கிழமை (01) உத்தரவிட்டார்.

வழக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதி சஷி வீரவன்ச, நீதிமன்றத்தில் ஆஜரானார். வழக்குத் தொடுநர் தரப்பில் ஆஜராகவேண்டிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திரிபா பீரிஸ், சிறப்பு பாராளுமன்றக் குழுவின் முன் சாட்சியங்களை ஆய்வு செய்வதற்காக ஆஜராகி வருவதாக, அரசு தரப்பு நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கஹவத்தையில் கடத்திச் சூட்டில் இளைஞன் பலி: இளைஞன் காயம்



இந்த துப்பாக்கிச் சூட்டில் 22 வயதுடைய இளைஞன் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், 27 வயதுடைய இளைஞன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளார்.

இதனையடுத்து காயமடைந்த இளைஞன் கஹவத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிதாரிகள் கைத் துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# AI ஊடாக உருமாற்றினால் சட்ட நடவடிக்கை



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகளுக்கு மாற்றீடான செயற்கை நுண்ணறிவுப் படங்கள் சமூக வலைத்தளங்க ளிலும், பொதுவெளியிலும் பரப்பப்படுகின்றன.

**“ போலியான செயற்கை நுண்ணறிவுப் படங்களைப் பகிர்பவர்கள் மீது, நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்**

இப்படியான பிழையான படங்கள் பகிரப்படுவது குற்றவியல் விசாரணைகளுக்கு இடையூறு செய்வதோடு, உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் உருவ அடையாளங்கள் மாற்றப்படலாம் எனவும், இந்தப் புதைகுழியைத் தவறான விதத்துக்குக் கொண்டுசெல்ல ஓர் உத்தியாக இதனைக் கையாளுகின்றனரா எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் சந்தேகத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, குறித்த போலியான செயற்கை நுண்ணறிவுப் படங்களைப் பகிர்பவர்கள் மீது, நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். ஆகவே, சமூக வலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செயற்கை நுண்ணறிவுப் படங்களைப் பரப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

# சஷிக்கு எதிரான வழக்குக்கு திகதி குறிப்பு

சமிந்த என்ற நபர் தாக்கல் செய்த புகாரின் அடிப்படையில், திருமதி சஷி வீரவன்சவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் துறை இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது. அரசு வழங்கிய வெளிநாட்டு கடவுச்சீட்டை பெறுவதற்காக 2010 அக்டோபர் 13ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் போலி பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களுடன் விண்ணப்பத்தை சமர்ப்பித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# “அமெரிக்காவுடன் பேசிய ஒரே ஆசிய நாடு இலங்கை”



அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பைத் தொடர்ந்து, இலங்கை தூதுக்குழு கடந்த மாதம் வொஷிங்டன், டி.சி.க்கு விஜயம் செய்தது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிமுகப்படுத்திய தொடர்ச்சியான பரஸ்பர நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த வரி 90 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்தபோது, சர்வதேச நாணய நிதியத்தின் துணை நிர்வாக பணிப்பாளர் கீதா கோபிநாத், வரி பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் காட்டிய பாராட்டத்தக்க முன்னேற்றத்தை ஒப்புக்கொண்டார்.

ஆனால், அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார், இலங்கையின் ஏற்றுமதியில் அமெரிக்கா 25% பங்களிப்பைக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டார்.

# “கேபிளால் கழுத்தை நெரித்து கொலை செய்தோம்”

அவரது உடலை ஜீப்பில் வீசி எரித்து, 5 இலட்ச ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள தங்க நகைகள் உள்ளிட்ட விலைமதிப்பற்ற பொருட்களை கொள்ளையடித்த 19 மற்றும் 29 வயதுடைய இரண்டு முக்கிய சந்தேக நபர்களை திங்கட்கிழமை (30) அன்று பொலிஸார் கைது செய்து விசாரித்துள்ளனர்.

இந்தக் குற்றத்தைச் செய்த 29 வயது முக்கிய சந்தேக நபர், கொலை செய்யப்பட்ட கமல் சம்பத் குருப்புவின் ஹோட்டலின் முன்னாள் ஊழியர் ஆவார், மேலும் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

விசாரணையில், தொழிலதிபரின் தங்க நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை கொள்ளையடிக்கும் நோக்கில் இது நடந்திருப்பது தெரியவந்துள்ளது.

இங்கு கைது செய்யப்பட்ட 29 வயது பிரதான சந்தேக நபர், 5 மாதங்களுக்கு முன்பு சம்பத் குருப்புக்குச் சொந்தமான ஹோட்டலில் பணிபுரிந்து வந்தார். பின்னர் அவர் வெளியேறிவிட்டாலும், தொழிலதிபருடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறார்.

கந்துபோட பிலெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர், மஹாவா பகுதியைச் சேர்ந்த 19 வயது நண்பருடன் சேர்ந்து வர்த்தகரை கொலை செய்து அவரது தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்தார்.

25ஆம் திகதி காலை, 29 வயது சந்தேக நபர் தொழிலதிபரின் தொலைபேசியில் அழைத்து, ஒரு நண்பருக்குச் சொந்தமான நிலத்தில் வீடு கட்ட விரும்புவதாகக் கூறி, அதை ஆய்வு செய்ய வருமாறு கேட்டுக் கொண்டார்.

ஒப்பந்த வீடு கட்டும் தொழிலையும் ஒரு தொழிலாக நடத்தி வந்த சம்பத் குருப்பு, அன்று காலை தனது தலைமுடியை வெட்டி 29 வயது இளைஞரைச் சந்திக்க வந்தார்.

கந்துபோடை பகுதியில், சந்தேக நபர்கள் இருவரும் தொழிலதிபரின் ஜீப்பில் ஏறி, வெறிச்சோடிய நிலம் உள்ள ஒரு பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அப்போது, ஜீப்பின் பின்னால் இருந்த 19 வயது இளைஞர் வர்த்தகரின் கழுத்தில் நைலோன் கயிற்றைக் கட்டியுள்ளார், மேலும் முக்கிய சந்தேக நபர் அவரை கழுத்தை நெரித்து கொன்றுள்ளார்.

அந்த நேரத்தில், தொழிலதிபர் “நீ என்ன செய்கிறாய்?” என்று கூச்சலிட்டுள்ளார், ஆனால் சந்தேக நபர்கள் தொழிலதிபரை கழுத்தை நெரித்து கொன்றுள்ளனர்.

அதே நாள் பிற்பகலில், தொழிலதிபரின் உடலை ஜீப்பில் வைத்து மஹாவா பகுதிக்கு கொண்டு சென்று, அவர் அணிந்திருந்த தங்க நெக்லஸ், வளையல்கள், பணம் மற்றும் மொபைல் போன் ஆகியவற்றை கொள்ளையடித்து, அவரது உடலை வாகனத்தில் போட்டு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்த மர்ம மரணம் குறித்த விசாரணைகள் வடமேற்கு மாகாணத்திற்குப் பொறுப்பான மூத்த டி.ஐ.ஜி.அஜித் ரோஹணவின் முழு மேற்பார்வையின் கீழ் தொடங்கப்பட்டன.

குருநாகல் டி.ஐ.ஜி. சரத்குமார மற்றும் மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் திஸ்ஸ விதானகே ஆகியோர் மாவதகம காவல் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் ஹெட்டியாராச்சி, குருநாகல் குற்றப்பிரிவு காவல் நிலையப் பொறுப்பதிகாரி சுமனவீர மற்றும் மகாவ காவல் நிலையப் பொறுப்பதிகாரி குலதுங்க ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடத்திய விசாரணையின் போது, இரண்டு சந்தேக நபர்களும் டோரடியாய மற்றும் மகாவ பகுதிகளில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து திருடப்பட்ட தங்க வளையல்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அடகு வைக்கப்பட்ட தங்க நெக்லஸும் மீட்கப்பட்டுள்ளது. திருடப்பட்ட கிட்டத்தட்ட 1.4 மில்லியன் ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொலையில் பயன்படுத்தப்பட்ட நைலோன் கயிற்றையும் பொலிஸாரார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தக் கொலையில் தொடர்புடைய இரண்டு முக்கிய சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விசாரணைக்காக 48 மணி நேர தடுப்புக்காவல் உத்தரவு பெறப்படும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா இடைநீக்கம்




கசிந்த தொலைபேசி அழைப்பின் பேரில் அவரது கூட்டாளிகள் விலகியதை அடுத்து, தாய்லாந்து மன்னர், செவ்வாயன்று பேடோங்டார்னின் அமைச்சரவை மறுசீரமைப்பை அங்கீகரித்துள்ளார்.

கம்போடியாவுடனான எல்லை பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில் ஜூன் 15 அன்று ஒரு தொலைபேசி அழைப்பிலிருந்து சர்ச்சை வெடித்தது. இந்த அழைப்பின் போது, ஷினவத்ரா ஹன் செனை “மாமா” என்று குறிப்பிட்டார் மற்றும் தாய்லாந்து இராணுவத் தளபதியை விமர்சித்தார், இது இராணுவ ஆதிக்கம் செலுத்தும் நாட்டில் ஒரு எல்லை மீறுவதாகக் கருதப்படுகிறது. அதன் பின்னர் அவர் தனது கருத்துக்களுக்கு மன்னிப்பு கோரியுள்ளார், அவை பேச்சுவார்த்தை தந்திரமாகவே கூறப்பட்டதாகக் கூறினார்.

கசிந்த உரையாடல் பொதுமக்களின் சீற்றத்தைத் தூண்டியது, மேலும் ஷினவத்ராவின் கூட்டணி அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்தது. தொடர்ந்து தற்போது, கூட்டணியில் உள்ள ஒரு முக்கிய கட்சி விலகி, பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க வாய்ப்புள்ளது. இந்த சம்பவத்திற்குப் பிறகு ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளனர். “செயல்முறை அதன் போக்கில் செல்ல நான் அனுமதிப்பேன்” என்று திங்களன்று பேடோங்டார்ன் செய்தியாளர்களிடம் கூறினார். பேடோங்டார்ன் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு பதவியேற்றார், ஆனால் கம்போடியா சம்பவம் அவரது நிலையை கடுமையாக பலவீனப்படுத்தியுள்ளது.

தனித்தனியாக, அவரது தந்தை, முன்னாள் பிரதமர் தாக்சின் ஷினாவத்ராவும் சட்ட சிக்கல்களை எதிர்கொள்கிறார். 2015ஆம் ஆண்டு தென் கொரிய ஊடகத்திற்கு அளித்த பேட்டி தொடர்பாக அரச வம்சாவளி அவதூறு குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள அவர் நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொள்கிறார். தாய்லாந்தின் சக்திவாய்ந்த முடியாட்சியை அவர் அவமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை மையமாகக் கொண்டது இந்த வழக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் கடுமையான குற்றமாகும். அவர் குற்றச்சாட்டுகளை மறுத்து, மகுடத்திற்கு விசுவாசமாக இருப்பதாக உறுதியளித்துள்ளார்.

# கேஸ் விலையில் மாற்றம் இல்லை

இதேவேளை, மாதாந்த விலை திருத்தத்திற்கு ஏற்ப லாஃப் எரிவாயுவின் விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 4,100 ரூபாய் ஆகவும், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 1,645 ரூபாயாகவும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள்களின் விலைகள் அதிகரித்தாலும்

# “போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்காது”



செவ்வாய்க்கிழமை (01) திட்டமிடப்பட்ட பேருந்து கட்டண திருத்தம் பரிசீலிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்துள்ளார்.

பேருந்து கட்டண திருத்தம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளதாவது, அறிவிக்கப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்ட பேருந்து கட்டண திருத்தம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று கூறினார். புதிய கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விலை திருத்த சூத்திரத்தைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டன.

எரிபொருள் விலை சூத்திரத்தைப் பயன்படுத்திய பிறகும், இந்த நேரத்தில் பேருந்து கட்டணங்களை திருத்த வேண்டிய அவசியமில்லை.

முன்மொழியப்பட்ட கட்டண சரிசெய்தல் மதிப்பாய்வு செய்யப்பட்டதாகவும், ஆனால் கணக்கீட்டு முடிவுகள் தற்போதைய சூத்திரத்தின் கீழ் அதிகரிப்பு. மேலும், எரிபொருள் விலைகள் ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியிலும், நியாயமான மற்றும் மலிவு விலையில் பொதுப் போக்குவரத்து கட்டணங்களைப் பராமரிப்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக அமைச்சர் பயணிகளுக்கு உறுதியளித்தார்.

பெற்ரோலின் விலை ரூ.12 அதிகரித்தாலும், முச்சக்கர வண்டி கட்டணம் அதிகரிக்கப்படாது என அகில இலங்கை முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

பெற்ரோலின் விலை அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும், முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை தீர்மானிக்கும் அதிகாரம் முச்சக்கர வண்டி தொழிற்சங்கங்களுக்கு இல்லை.

முழு நாட்டிற்கும் கட்டணத்தை தீர்மானிக்கும் சட்டப்பூர்வ அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணையத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, மேற்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையத்திடம் அதே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பெட்ரோலின் விலை இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டிருந்தாலும், முச்சக்கர வண்டி கட்டணம் குறைக்கப்படாததால் பெட்ரோல் விலை அதிகரித்திருக்கும் போது கட்டணத்தை அதிகரிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில், ஒரு லீற்றர் டீசலின் விலை 15 ரூபாவால் அதிகரித்தாலும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வேன் கட்டணம் அதிகரிக்கப்படாது என பாடசாலை மாணவர்கள் போக்கு வரத்து சங்கத்தின் தலைவர் மல்ஸ்ரீ டி சில்வா கூறியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வேன் கட்டணம் அதிகரித்தால், மாணவர்களின் எண்ணிக்கை குறையும் எனவும் மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்த முடியாத பெற்றோருக்கு மேலும் சுமையை ஏற்படுத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்திற்கு ஏற்ப திங்கட்கிழமை (30) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 289 ரூபாயாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 185 ரூபாயாகும்.

மேலும் 92 ஒக்டேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 305 ரூபாயாகும்.

இந்நிலையில், லங்கா ஐஓசி நிறுவனமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைத் திருத்தத்திற்கு அமைய, எரிபொருள் விலைகளை திருத்தியுள்ளது.

# 50 வருட மத வாழ்க்கை

மத வாழ்க்கையில் 50 ஆண்டுகால நிறைவை கொழும்பு புனித லூசியஸ் பேராலயத்தில் கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் கொண்டாடினார். ஒரு பிரார்த்தனையில் பங்கேற்ற பிறகு, கேக்கை வெட்டினார். தனது மத வாழ்க்கை முழுவதும் பல சவால்களையும் அச்சங்களையும் எதிர்கொண்டதாக கார்டினல் ரஞ்சித் தெரிவித்தார்.

















# 'சீட் பெல்ட்' கட்டாயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் இ.போ.ச. சபையினால் செவ்வாய்க்கிழமை(01) அன்று சேவையில் சேர்க்கப்பட்ட அனைத்து நீண்ட தூர மற்றும் குறுகிய தூரப் பேருந்துகளிலும் 'சீட் பெல்ட்' (ஆசன பட்டி) பொருத்தப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு பேருந்தின் ஓட்டுநர்களுக்கும் 'சீட் பெல்ட்' கட்டப்பட்ட நிலையில் பேருந்துகளை இயக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் இ.போ.ச. டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆசன பட்டிகள் இல்லாத பல பேருந்துகளை இயக்க அனுமதிக்கப்படவில்லை எனவும் குறித்த பேருந்துகளிலும் ஆசன பட்டிகள் பொருத்தப்பட்ட பிறகு இயக்க அனுமதிக்கப்படும் என்றும் குறித்த அதிகாரி தெரிவித்தார்.



பேருந்துகளில் பொருத்தப்பட்ட ஆசன பட்டிகளில் தொழில்நுட்ப குறைபாடுகள் இருப்பதாக சாரதிகள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் பெண் கைது

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் கொழுந்துபிலவு பகுதியில் உள்ள வீடொன்றின் பின்புறம் மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்த சுமார் 79 கிலோ 245 கிராம் நிறை கொண்ட கேரள கஞ்சாவுடன் 55 வயதுடைய பெண் திங்கட்கிழமை (30) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். எஸ்.ஜே.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மல்கடுவ குளத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) மாலை இடம்பெற்றுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் திங்கட்கிழமை (30) அன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மிளகாய் பொடியை வீசி கொள்ளையடித்த குடும்பம்

மோட்டார் சைக்கிள்களில் தனியாகச் செல்லும் பெண்களின் கண்களில் மிளகாய்ப் பொடியை வீசி அவர்களின் தங்க நகைகளைக் கொள்ளையடித்த ஒரு தாய், தந்தை மற்றும் மகன் மஹாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வாரியபொல, பாதெனிய பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இதன்போது தப்பியோடிய தந்தை தலதாகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

முப்பத்து மூன்று வயதுடைய தாய், பதினைந்து வயதுடைய மகன் மற்றும் தாயின் இரண்டாவது திருமணத்தின் கணவனான இருபத்தி இரண்டு வயதுடைய இளைஞன் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் ஐந்து மாத கர்ப்பிணி என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



# காமினி லொக்குகே காலமானார்



முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தனது 82 வயதில்திங்கட்கிழமை (30) இரவு காலமானார்.

மூத்த அரசியல்வாதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட கால உறுப்பினரும், பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) உறுப்பினருமான அவர், விளையாட்டு, எரிசக்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர் உட்பட பல அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார்.

அவர் பல முறை கொழும்பு மாவட்டத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் தேசிய அரசியலில் ஒரு முக்கிய நபராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## வாடகைக்கு

கல்கிசை டெம்பிள்ஸ் வீதியில், 3 படுக்கையறைகள் (ஒன்று ஏ.சி. வசதியுடன்), 2 கழிப்பறைகள், வேலையாட்கள் அறை, கழிப்பறை, கேரேஜ், சிறிய தோட்டம், கொண்ட ஒற்றை கட்டிடம், வீடு, மாதாந்தம் 75,000 - 80,000 வாடகைக்கு உள்ளது. தொடர்புகொள்ளவும்: 077-768 8144



## கம்பஹா பிரதேச சபை

# விலைமனு கோரல்

கொள்முதல் இல DS/02/2025

01. கம்பஹா பிரதேச சபையின் கொள்முதல் குழுவின் தலைவர் மூலம் மாகாண சபை திட்டம், கிராமப்புற வீதிகள் திட்டம் மற்றும் பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்டம் மற்றும் சபை நிதிகள் என்ற விதிகளின் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி, கம்பஹா பிரதேச சபை பகுதியில் உள்ள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தகுதியான ஏலதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலங்களை விலைமனுக்கள் கோரல்.

02. தேசிய போட்டி விலைமனு முறையின்படி விலைமனுக்கள் கோரப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 2025.07.01 ஆம் திகதி முதல் அரச அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை கம்பஹா பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவிற்குச் சென்று ஏலங்கள் தொடர்பாக பரிசீலிக்கலாம் மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பணி மேற்பார்வையாளரிடம் (033--2220145) பெற்றுக்கொள்ளலாம்.

04. 2025.07.01 ஆம் திகதி முதல் 2025.07.21 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை திரும்பப்பெற முடியாத கட்டணமாக ரூ.1000.00 (ஆயிரம் ரூபாய்) செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து விலைமனு விண்ணப்பங்களை அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

05. அசல் மற்றும் நகலாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள், 2025.07.22 ஆம் திகதி அன்று காலை 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, "தலைவர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது **கொள்முதல் இல, திட்டம், இலக்கம், பெயர் மற்றும் அசல் அல்லது நகலாக கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலை** இல் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக பெறப்பட்ட விலை மதிப்பீடுகள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பெறப்படும் நேரம் முடிந்தவுடன் கம்பஹா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் ஏலதாரர்கள் / பிரதிநிதிகள் முன்னிலையில் ஏலம் திறக்கப்படும்.

06. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது, CIDA பதிவை உறுதிப்படுத்த அதன் சான்றளிக்கப்பட்ட நகலை பண ஏலப் பிணையத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும் (திரும்பப்பெறக்கூடியது) வைப்பு செய்வதாக இருந்தால், கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு அற்த ரசீது அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதப் பத்திரம் (செல்லுபடியாகும் காலம் 45 நாட்கள் இருக்க வேண்டும்) அல்லது ஏலத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

பி.டீ. செனரத் பீரிஸ்,
தலைவர்,
கொள்முதல் குழு,
கம்பஹா பிரதேச சபை,
மிரிஸ்வத்தே, முதுங்கொட.
2025.06.26

தொலைபேசி எண் : 0332222020
தொலைநகல் : 0332220144

### அட்டவணை

| வரிசை இல | திட்ட இலக்கம் | திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.) (வாட் தவிர்த்து) | ஏலப் பாதுகாப்பு (ரூ.) |
|---|---|---|---|---|
| | | **பரவலாக்கப்பட்ட பட்ஜெட் திட்டம் – 2025** | | |
| 1 | GAM/DCB/ 16/33/23/1/2025 | வெலிவேரிய, பிங்கோவத்தவிலிருந்து வேலாவின் நடுப்பகுதி வழியாக வனாத்தவத்த பகுதி வரை செல்லும் விவசாய சாலையின் பக்கவாட்டு தடுப்புகள் மற்றும் கான்கிரீட் அமைத்தல், மற்றும் டிராக்டர் சாய்வுப் பாதைகளை அமைத்தல். | 7,112,657 | 71,126.57 |
| | | **கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் – 2025** | | |
| 2 | GAM/RRDP/ 16/33/83/2/2025 | பி.செ.பி 240/பி மேற்கு வெலிவேரிய கி.அ.பி, குடுமிரிசலந்த அசபுவவிற்கு அருகில் இருந்து மாத்தறை சந்தை வரையிலான சாலை மற்றும் திரு. நாரதரின் வீட்டிற்குச் செல்லும் பக்கவாட்டு சாலைக்கு கம்பளம் அமைத்தல். | 6,625,332 | 66,253.32 |
| 3 | GAM/RRDP/ 16/33/82/1/2025 | பி.செ.பி 222/ஏ கொசோவிட்ட கீனகஹவெல வீதி, கி.சே.பி வலது புறத்தில் திரு வாடிய வத்த உடுகம்பால அவர்களின் இல்லத்திற்கு செல்லும் வீதியை தார் போட்டு, இடித்து அபிவிருத்தி செய்தல். | 1,648,196 | 16,481.96 |
| | | **மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டம்** | | |
| 4 | GPS/2/5/2/ 02/2025 | கம்பஹா உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட அண்ணாசிவத்தை வீதியில் இருந்து சருகமண்டியை நோக்கிய வீதியின் அரிப்பு ஏற்பட்ட இடத்தில் பாதுகாப்புக் கட்டுக்கள் அமைக்கும் பணிகள். | 5,079,424 | 50,794.24 |
| 5 | GPS/2/5/2/ 05/2025 | கம்பஹா பிரதேச சபைக்குச் சொந்தமான கணேமுல்ல சுமேத மாவத்தை கல்லறை வீதியின் அரிக்கப்பட்ட பகுதியை 10 மீட்டருக்கு புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு அணையை 47 மீட்டராக விரிவுபடுத்துதல். | 2,286,429 | 22,864.29 |
| 6 | GPS/2/5/2/ 07/2025 | கம்பஹா உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான அமுனுகொட பொது நூலகத்தின் கூரையை நவீனப்படுத்துதல். | 1,271,065 | 12,710.65 |
| 7 | GPS/2/5/2/ 13/2025 | கம்பஹா பிரதேச சபை பிரிவில் 239 பி கல்லொலுவ/240 பி மேற்கு வெலிவேரிய கிராம பஞ்சாயத்து. பிரிவுகளுக்குச் சொந்தமான ஹிக்கஹமுலா சாலையின் தொடக்கத்தில் பாலத்தின் இருபுறமும் இடிந்து விழுந்த பக்கவாட்டுச் சுவர்களின் கட்டுமானம். | 843,282 | 8,432.82 |
| | | **சபை நிதிகள்** | | |
| 8 | GPS/2/5/1/ 10/2025 | அகரவிட்ட கோயில் சாலையின் தொடக்கத்தில் தேங்கும் மழைநீரை முறையாக வடிகால் வசதி செய்வதற்கான ஏற்பாடுகள். | 168,533 | 1,685 |
| 9 | GPS/2/5/1/ 11/2025 | ஒருத்தோட்ட வடக்கு அமைதி வீதியை புனரமைத்தல். | 1,156,004 | 11,560 |
| 10 | GPS/2/5/1/ 20/2025 | மக்கவிட்ட லயனல் குணவர்தன மாவத்தை புனரமைத்தல். | 528,452 | 5,285 |
| 11 | GPS/2/5/1/ 21/2025 | நிதாஸ் மாவத்தையின் முதலாவது குறுக்கு வீதியை புனரமைத்தல். | 1,117,318 | 11,173 |
| 12 | GPS/2/5/1/ 28/2025 | 220 ஏ அம்பன்விட்டாவில் உள்ள கொட்டகெதர புத்தர் சிலைக்கு முன்னால் திரு. ஜனகரின் வீட்டிற்குச் செல்லும் சாலையை கான்கிரீட் செய்தல். | 1,411,281 | 14,113 |
| 13 | GPS/2/5/1/ 29/2025 | 208 மிடெல்லவிட்ட, வெத்தசிங்க மாவத்தையில் உள்ள மூன்றாவது குறுகிய சாலையில் விளக்கு கம்பங்களை நிறுவுதல் மற்றும் சாலையை நடைபாதை கற்களால் அமைத்தல். | 1,339,479 | 13,395 |
| 14 | GPS/2/5/1/ 30/2025 | ஹொரகொல்ல வடக்கு, லிங்கன் அவென்யூவில் காபட் செய்தல். | 1,395,349 | 13,953 |
| 15 | GPS/2/5/1/ 31/2025 | கணேமுல்ல வடக்கு ஜெயகொடிவத்த பிரதான வீதிக்கு காபட் செய்தல். | 1,354,274 | 13,543 |
| 16 | GPS/2/5/1/ 32/2025 | பஹலயகொட மஹாவத்த பழைய பள்ளி சாலையின் மீதமுள்ள பகுதியை புதுப்பித்தல். | 1,094,697 | 10,947 |
| 17 | GPS/2/5/1/ 35/2025 | கணேமுல்ல தெற்கு 236/டீ, கணேமுல்ல பிடவெல கல்லறை வீதியின் அபிவிருத்தி. | 1,267,948 | 12,679 |
| 18 | GPS/2/5/1/ 36/2025 | வ/கொசின்னா, ஜெயா மாவத்தையில் முதல் புறவழி வீதியின் அபிவிருத்தி. | 839,455 | 8,395 |

# மக்களின் வயிற்றில் அடிக்கும் பராட்டேயும் பராட்டாவும்

பெரும் நகரங்களில் வாழும் நடுத்தர மற்றும் அதற்கு குறைந்த வருமானத்தை ஈட்டும் குடும்பத்தினரின் இரவுவேளை உணவு, பராட்டாகவே இருக்கும். ரொட்டி மாவு, உப்பு, தண்ணீர் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பராட்டா மிகவும் சுவையான உணவாகும். அதுவே, பல நோய்களுக்குக் காரணமாகவும் அமைந்துவிடுகின்றன.

இந்நிலையில், எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், சேவைகள் கட்டணங்கள் அதிகரித்துவிட்டதாகக் காரணங்களைக் கற்பிக்கும் சில ஹோட்டல்களின் உரிமையாளர்கள் பராட்டாவின் விலையைக் கூட்டிவிடுவர். இல்லையேல் அதன் சுற்றளவைக் குறைத்துவிடுவர். இதனை அவ்வாறானவர்கள் தங்களுடைய வணிக சூட்சுமமாக வியாக்கியானம் செய்கின்றனர்.

ஆக, ஒருவேளை உணவாக பராட்டா மற்றும் பராட்டாவினால் தயாரிக்கப்படும் ஏனைய உணவுவகைகளை சாப்பிட்டோரின் வயிற்றில் அடிவிழக்கூடும். எனினும், எரிவாயுக்களின் விலைகளில் மாற்றமில்லை என்பதால், ஹோட்டல் உரிமையாளர்கள் பராட்டாவில் கையை வைக்கமாட்டார்கள் என நம்பலாம்.

எனினும், ஜூலை 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்திருக்கும் பராட்டே (Pareto) சட்டத்தால், நிதி நிறுவனங்களில் கடன் பெற்று சொத்துக்களைக் கொள்வனவு செய்திருப்போரில் பலருக்கும் வயிற்றில் அடி விழப்போகிறது என்பது மட்டுமே உண்மையாகும்.

வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட சொத்தை சரியான நேரத்தில் சேமிக்க முடியாத பட்சத்தில் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் ஏலத்தில் விற்கும் உரிமையை வங்கிக்கு வழங்குகிறது. இது வங்கிகளுக்காக உருவாக்கப்பட்ட சட்டம் என்றாலும், நிதி நிறுவனங்களும் இந்தச் சட்டத்தைப் பின்பற்றுகின்றன.

கடனை செலுத்தாததால் ஒரு வாகனம் நிலுவையில் இருக்கும்போது, நிதி நிறுவனம் வாகன உரிமையாளரின் கழுத்தைப் பிடித்து, அவரை வெளியே தள்ளி, வாகனத்தைக் கடத்தி விற்க சில சீசர்களை அனுப்புகிறது. பராட்டே சட்டம் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த நாட்டில் நிதி நிறுவனங்கள் என்று முத்திரை குத்தப்பட்ட ஆயிரக்கணக்கான மோசடி நிறுவனங்கள் உள்ளன. இந்த மோசடி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத, ஆனால் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைக்கு உட்பட்டு மிகவும் சுத்தமான வணிகத்தைச் செய்யும் நிதி நிறுவனங்களும், நிதி நிறுவனங்களாகக் காட்டிக் கொள்ளும் திருடர்களும் உள்ளனர். பராட்டே சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த திருடர்கள் எப்போதும் ஏழைகளின் சொத்தை கொள்ளையடித்துள்ளனர்.

கொரோனாவுக்குப் பிறகு இலங்கையின் 95 சதவீத வணிகங்கள் சரிந்தன. நிதி மூலம் வணிக நோக்கங்களுக்காக சிறிய லொறிகள், இயந்திரங்கள் மற்றும் பிற உபகரணங்களைப் பெற்றவர்கள் சிக்கித் தவித்தனர். இதற்கிடையில், சில சிறிய அளவிலான நிதி நிறுவனங்கள் ஏழை மக்களின் வாகனங்களைக் கைப்பற்றத் தொடங்கின.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது தொழிலதிபர்கள் வேலைக்குத் திரும்பும் வரை பராட்டே சட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என்று அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டது. எனினும், அமைச்சரவை அங்கிகாரத்தின் பிரகாரம், இந்த பராட்டே சட்டம், ஜூலை 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






எம்.எஸ்.எம்.ஐயூப்

# பிடியை தளர்த்துகிறது ஐ.நா. மனித உரிமை பேரவை

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் கடந்த வாரம் மேற்கொண்ட இலங்கை விஜயத்தை அடுத்து இலங்கையின் போர் கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் நிலைப்பாட்டில் தளர்வு ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல் விடயங்களைக் கையாள்வதற்காக உள்நாட்டு பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது சர்வதேச தரநிலைகள் மற்றும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் மனித உரிமை ஆணையாளர் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு ஜூன் 26ஆம் திகதி கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கூறியமையே இதற்குக் காரணமாகும்.

சில ஊடகங்கள் குறிப்பாக ஆங்கில இணையத்தளங்கள் அவர் வழமை போல் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேச பொறிமுறையொன்றையே வலியுறுத்தினார் என்று குறிப்பிட்டு இருந்த போதிலும், மேற்படி ஊடகவியலாளர் மாநாட்டில் மனித உரிமை ஆணையாளர் ஆற்றிய உரையைப் கூர்ந்து கவனித்தால் சற்று குழப்பமாகவே இருக்கிறது.

அவர் அதில் இந்த பொறிமுறை சர்வதேச பொறிமுறையாக இருக்க வேண்டுமா அல்லது உள்ளக பொறிமுறையாக இருக்க வேண்டுமா என்பதை பற்றி நேரடியாக எதனையும் கூறவில்லை. அதுவே அவரது உரை குழப்பமாக இருக்கக் காரணமாகியது.

'நம்பகமான மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வென்ற உள்ளக பொறுப்புக் கூறல் பொறிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதில் இலங்கை கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறது. எனவே, தான் இலங்கையர்கள் சர்வதேச மட்டத்திலான உதவிகள் மூலம் நீதிக்காக வெளியாட்களை நாடினார்கள். இறுதியில் அது அரசின் பொறப்பாவதோடு இந்நடைமுறையானது தேசிய ரீதியில் உரித்தானதாகவும் சர்வதேச ரீதியில் ஏற்கப்பட்டு உதவி செய்யப்படக் கூடியதாகவும் அமைய வேண்டும்” என்று அவர் தமது உரையில் கூறியிருக்கிறார்.

உரையின் இந்தப் பகுதிக்கு அவர் உள்ளக பொறிமுறையொன்று வேண்டும் என்றார் என்றும் சர்வதேச பொறிமுறையொன்றையே வலியுறுத்தினார் என்றும் எவரும் தாம் விரும்பியவாறு விளக்கமளிக்க முடியும். ஆயினும் அதில வரும் 'இறுதியில் அது அரசின் பொறப்பாவதோடு இந்நடைமுறையானது தேசிய ரீதியில் உரித்தானதாகவும் சர்வதேச ரீதியில் ஏற்கப்பட்டு உதவி செய்யப்படக் கூடியதாகவும் அமைய வேண்டும். என்று கூறும்போது அது உள்ளக பொறிமுறையையே குறிக்கிறது என்று தெரிகிறது.

அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தது முதல் பதவிக்கு வந்த அரசாங்கங்களில் 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த 'நல்லாட்சி' அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் ராஜபக்ஷக்களின் அரசாங்கங்களைப் போல, ஐ.நா. மனித உரிமை பேரவையுடன் முரண்பட விரும்பவில்லை. எனவே, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் போலவே தற்போதும் மனித உரிமை பேரவையும் இலங்கை விடயத்தில் சற்று நெகிழ்வான போக்கை கடைப்பிடிப்பதாக தெரிகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று 9 மாதங்களிலேயே தற்போதைய மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அதேபோல, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று 13 மாதங்களில் அப்போதைய மனித உரிமை ஆணையாளர் செய்த் ராத் அல் ஹூசைன் இலங்கைக்கு வந்தார். அவரும் பொறுப்புக் கூறல் விடயத்தில் சர்வதேச பொறிமுறையொன்று வேண்டும் என்ற மனித உரிமை பேரவையின் அது வரையிலான நிலைப்பாட்டிலிருந்து மாறி கருத்து தெரிவித்தார்.

தமது விஜயத்தின் இறுதியில் அறிக்கையொன்றை வெளியிட்ட அல் ஹூசைன் இலங்கையின் நீதித்துறையானது மிகவும் அரசியல் மயமான, நடுநிலையற்ற நம்பிக்கை வைக்க முடியாத ஒன்று என்று அவ்வறிக்கையில் ஓரிடத்தில் கூறிவிட்டுப் பொறுப்புக் கூறல் பொறிமுறையைப் பற்றி தீர்மானிப்பது இலங்கை அரசாங்கத்தின் இறைமையோடிணைந்த உரிமை என்றும் கூறினார். போர் குற்றங்களைப் பற்றி விசாரணை செய்யும் பொறிமுறையைப் பற்றி தமது அலுவலகம் எதைப் பரிந்துரை செய்ததாலும் அதைப்பற்றி எந்தத் தீர்மானத்தை எடுப்பது என்பது இலங்கையின் இறைமையும் உரிமையுமாகும் என்று மற்றொரு இடத்திலும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

தற்போதைய ஆணையாளர் பொறுப்புக் கூறல் விடயத்தைப் பற்றி குறிப்பிடும் போது, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆதாரங்களை திரட்ட தமது அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவ்வாதாரங்களை இலங்கையிலோ ஏனைய நாடுகளிலோ நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் சாட்சியாக வழங்க முடியும் என்றும் அவர் கூறினார். அதன் மூலமும் அவர் இலங்கையில் உள்ளக பொறிமுறையொன்றின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரிபால - ரணில் விகரமசிங்க அரசாங்கம் முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போல, தமிழ் மக்களின் விடயங்களில் கடும் போக்கை கடைப்பிடிக்கவில்லை. அவ்வரசாங்கம் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டு இருந்த தடையை நீக்கியது. புலம் பெயர் அமைப்புக்களின் மாநாடொன்றை இலங்கையில் நடத்தவும் அப்போதைய வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர விருப்பம் தெரிவித்திருந்தார்.

இலங்கை விடயத்தில் 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக இலங்கையினதும் பொதுநலவாய நாடுகளினதும் நீதிபதிகளைக் கொண்ட கலப்பு பொறிமுறையொன்றை அமைக்கவும் அவ்வரசாங்கம் விருப்பம் தெரிவித்தது. போரின் போது, உயிர் நீத்தவர்களை நினைவு கூர மஹிந்தவின் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்பட்டன.

பின்னர் கலப்பு பொறிமுறையை தாம் விரும்பவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்த நிலையிலேயே அப்போதைய மனித உரிமை ஆணையாளர் அல் ஹூசைனின் இலங்கைகான விஜயம் இடம்பெற்றது. எனினும், மைத்திரிபாலவின் கருத்தைப் பெரிதுபடுத்தாமல் அல் ஹூசைன் பொறுப்புக் கூறலுக்கான நெறிமுறையைத் தீர்மானிப்பது இலங்கையின் உரிமையாகும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

அனுரகுமாரவின் அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னரும் தமிழர் விடயத்திலான அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. அவ்வரசாங்கமும் போர் காலத்தில் தெற்கிலும் வடக்கிலும் மூடப்பட்டு இருந்த பல வீதிகளை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிட்டது. போரில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர இம்முறை தடையேதும் இருக்கவில்லை. படுகொலை செய்யப்பட்ட பலர் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் செம்மணிக்குச் செல்ல தமக்கு இடமளிக்கப்பட்டதாக மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் கூறினார்.

அதேவேளை, அண்மையில் ஜனாதிபதி தெரிவித்த சில கருத்துக்களையும் அவர் வரவேற்றார். மே மாதம் 19ஆம் திகதி அரசாங்கம் வருடாந்தம் நடத்தும் போர் வீரர் தினத்தில் கலந்து கொள்வதில் ஜனாதிபதி அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. பின்னர் அந்த நிகழ்வில் கலந்து கொண்ட போதிலும், அவர் தமது உரையின் போது, போர் வெற்றியைப் பாராட்டாது நல்லிணக்கத்தை வலியுறுத்தினார். பல பெரும்பான்மை தலைவர்கள் அதனை விமர்சித்தனர். வோல்கர் டேர்க் அதனைத் தான் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

எனினும், கடந்த ஒக்டோபர் மாதம் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அனுரகுமாரவின் புதிய அரசாங்கம் நிராகரித்தது. இந்நிலையிலும், இலங்கைக்கு உள்ளக பொறிமுறையொன்று வேண்டும் என்றே வோல்கர் டேர்க் கடந்த வாரம் கூறினார். முன்னர் குறிப்பிடப்பட்ட சாதகமான விடயங்கள் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

புவி அரசியலில் ஏற்படும் மாற்றங்களோடு தமது நலன்களில் ஏற்படும் மாற்றங்களுக்கிணங்க இந்திய அரசாங்கம் படிப்படியாக இலங்கை தமிழர்களைக் கைவிடுவதைப் போல, ஐ.நா. மனித உரிமை பேரவையும் இலங்கை அரசாங்கம் தொடர்பாக தளர்வுப் போக்கை கடைப்பிடிக்க முற்பட்டுள்ளதா என்ற கேள்வியும் அத்தோடு எழுகிறது.

ஒரு வகையில், காசாவில் இடம்பெறும் இனப்படுகொலைகளையும் இனச் சுத்திகரிப்பையும் கைகட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கும் மனித உரிமை பேரவைக்கும் மனித உரிமை ஆணையாளருக்கும் மனித உரிமை விடயத்தில் ஏனைய நாடுகள் மீது நெருக்குதலைக் கொடுக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிகிறது. ஏனெனில், அவர்கள் ஏதாவது ஒரு நாட்டுக்கு எதிராக ஏதாவது கடும் நடவடிக்கையை எடுத்தால் அந்நாடுகள் உத்தியோபபூர்வமாகவோ உத்தியோக பற்றற்ற முறையிலோ காசாவைக் காட்டி மனித உரிமை பேரவையின் நடவடிக்கைக்கு சவால் விடுக்கக் கூடும். ஏற்கெனவே இலங்கையில் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் இலங்கை விடயத்தில் நடவடிக்கை எடுக்க மனித உரிமை பேரவைக்கு என்ன தார்மிக உரிமை இருக்கிறது என்று கேள்வி எழுப்பியுள்ளன.

இலங்கையில் பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்ளக பொறிமுறையை ஏற்று மனித உரிமை பேரவை தமது பிடியைத் தளர்த்தினாலும், இது வரை அப்பேரவை மேற்கொண்ட நடவடிக்கைகள் மீளப்பெறப்படுவதில்லை. ஏற்கெனவே இலங்கையில் மனித உரிமைகளை மீறிய படைத்தரப்பினர் மற்றும் புலிகள் அமைப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குத் தேவையான சாட்சிகளைப் பேரவை திரட்டி ஒரு காப்பகத்தில் சேகரித்து வருகிறது. மனித உரிமை மீறிய சிலருக்கு எதிராக சில நாடுகள் விசா தடை மற்றும் சிறை தண்டனை போன்ற நடவடிக்கைகளை எடுத்தும் இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” என கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றை சேர்த்து, அங்குள்ள ஒருவருக்கு சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்தும் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது”.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### “பாதையை சீர் செய்து தாருங்கள்”

தலவாக்கலை, கிரேட்வெஸ்டன், ஸ்கல்பா லூஷா, வங்கி ஓயா ரதல்ல, நானுஓயா ஆகிய இடங்களுக்கு செல்லும் வீதியில் கல்கந்த தோட்டத்தில் இருந்து தலவாக்கலை மற்றும் கொட்டகலை பிரதேசத்திற்கு நீர் வழங்கும் அதிகார சபை அதிகாரிகளால் பிரதான வீதியை தோன்றி குழாய்கள் புதைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தோண்டப்பட்ட காபெட் பாதையை சீர் செய்யாமல் கைவிட்டு சென்றுள்ளனர். இதனால் பாதை மிகவும் மோசமாக மக்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளிடம் பலமுறை இது சம்பந்தமாக கதைத்த போதிலும், அவர்கள் முரண்பாட்டுக்கு வருவதாக தெரிவித்து இப்பாதையை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புனரமைத்து தருமாறு கோரி 300இற்கு மேற்பட்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், தமது பாதையை முறையாக சீர்திருத்தம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எஸ்.சதீஷ்





மலையகத்தின் பங்களிப்பு இல்லாத அபிவிருத்தி

# ஓர் உறக்க கனவு

அபிவிருத்தி என்பது ஒரு பல பரிமாண வளர்ச்சி செயல்முறையாகும். அது ஒவ்வொருவருடைய பார்வைக்கு ஏற்ப வேறுபடும். நாட்டுக்கு நாடு, சமூகத்துக்கு சமூகம், மக்களுக்கு மக்கள், வேறுபடும் தன்மை உடையது. ஆனாலும், அபிவிருத்தி தேவை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

இன்றைய உலகில் எல்லா நாடுகளும் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டே பயணிக்கின்றது. ஒரு சில நாடுகள் அதை முறையான அணுகு முறைகளின் ஊடாக வெற்றிகரமாக மேற்கொள்கின்றன. இதற்கு உதாரணமாக, இவ்வுலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளைச் சுட்டிக்காட்ட முடியும். இன்னும் சில நாடுகள் அபிவிருத்தி அடைந்து கொள்வதற்காகப் பல திட்டங்களுடன் அல்லது செயற்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் பயணிக்கின்றது. அதனையே நாம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என குறிப்பிடுகிறோம். அதாவது, நிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்கின்ற நாடுகள் என நாம் சுட்டிக் காட்டுகிறோம்.

ஒரு நாட்டில் அபிவிருத்தி என்பது உயர்வடைய வேண்டும் என்றால், அதற்கு அந்த நாட்டினுடைய மக்கள் முக்கியமானவர்களாவர். ஆகவே, இந்த மக்கள் என்பவர்கள் அபிவிருத்தியில் பயன் பெறுபவர்கள் மட்டுமல்ல, அபிவிருத்தியின் ஒரு பங்குதாரர்களாக அவர்களை உருவாக்க வேண்டியது அந்த நாட்டினுடைய அபிவிருத்தி திட்டத்தின் கடமையாக்கும். அப்பொழுதுதான் அங்கு அபிவிருத்தி என்பது ஒரு நிலைப்பாட்டினை அடையும் எல்லோரும் அதன் பயனர்களாகிவிட்டால் அங்கு அபிவிருத்தி என்பது முழுமை அடையாது.

அந்த அபிவிருத்தியில் பங்குதாரர்களை உருவாக்கும் பொழுது, அந்த அபிவிருத்தி என்றும் கீழ்நிலை படாமல் ஒரே சம தளத்தில் கட்டியெழுப்பபடும்.

அபிவிருத்தி என்பது தனித்து பொருளாதார காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன், மாத்திரம் தங்கி விடக்கூடாது இவ்வாறு தங்கி விட்டால் அது அபிவிருத்தி அல்ல, மாறாக, வருமான பகிர்வு, வறுமையை ஒழித்தல், அடிப்படைத் தேவைகளை விருத்தி செய்தல், வேலையின்மையை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்குதல் போன்ற பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு நாட்டினுடைய பொருளாதார காரணிகள் மாத்திரம் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்வதில்லை. மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறன்களையும் மேம்பாடுடைய செய்யும் வகையில் காணப்பட வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை. தேசிய பொருளாதாரத்தை மாத்திரம் அபிவிருத்தியாகக் கொண்டிருந்தால், இன்று அமெரிக்கா, சிங்கப்பூர், ரஷ்யா போன்ற நாடுகள் அபிவிருத்தியை அடைந்திருக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதாகும். 1950 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி என்பது தேசிய பொருளாதாரத்துடனே கட்டமைக்கப்பட்டது. ஆனால், அந்த கட்டமைப்பு தவறு இருப்பதாக உணரப்பட்டு 1970க்கு பின்னர் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டினுடைய தேசிய பொருளாதாரத்தில் மட்டும் தங்குவதில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் தங்கியுள்ளது என்பதே நிதர்சனமான உண்மை ஆகும்.

சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படாத போது, அவர்கள் புறக்கணிக்கப்பட்ட சமூகமாகக் கீழ்நிலை படுத்தப்படுகிறார்கள். அங்கு வறுமை, வேலையின்மை, என்பன உச்சக்கட்டத்தில் நிலை பெறுகின்றது.

ஆதாரமாக 1945 காலப்பகுதி இலங்கையில் இலவச கல்வி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் மலையகப்பகுதி மக்களுக்குப் புறக்கணிக்கப் பட்டதாகவே காணப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியில் இலவச கல்விக்கான வாய்ப்பு மலையக பிரதேசத்தை வந்தடைகிறது.

ஆனால், இன்று வரை அது முழுமை அடையாமல் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறு சரியான கல்வி கிடைக்கப் பெறாத தன்மையிலே அந்த சமூகத்தில் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து, அடிப்படை வசதிகளான உணவு, நீர் மற்றும் நிலம் போன்ற பல்வேறு வசதிகளை அற்றவர்களாக சமூகத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான ஒரு நிலை இருக்கும் பொழுது அபிவிருத்தி என்பது எவ்வாறு நிலைபெறும் என்பது கேள்விக்குறியாகிறது.

மலையகத் தமிழர்கள் என்பது இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் பணி செய்யவைக்கப்பட்ட மக்கள் குழுவாகும். இவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்தாலும், பல துறைகளிலும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனர்.

அவர்களுக்கான அங்கீகாரம் வழங்கும்போது, அவர்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் மதிக்கப்படுவார்கள். இலங்கையில் பெருந்தோட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களின் வாழ்க்கை நிலைமையை மதித்து அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்கும்போது, அவர்களது வாழ்வும் மேம்பாட்டையும். இதன் பொழுதே அபிவிருத்தி என்பது முறையாகக் கட்டி எழுப்பப்படும். அப்போதுதான் அபிவிருத்தி என்பது முழுமையாக அவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

200 வருட காலமாக அடிமை சமூகமாக அடையாளப்படுத்தப்படுகின்ற மலையக மக்கள், இன்றும் அடிப்படை வசதிகள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு தன்மை சமூகத்தில் காணப்படுகின்ற பொழுதும் “இலங்கை எவ்வாறு அபிவிருத்தி அடையும்? அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் ஏனைய மக்களுடைய வாழ்க்கைத் தரமும் வேறுபடுகின்றது. ஆகவே, எவ்வாறு அபிவிருத்தி என்ற தன்மையில் ஒரு ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமச்சீர் ஆன தன்மை உருவாகும். என்பதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது.”

இன்று வீடமைப்பு திட்டங்கள் எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டு விட்டது. ஆனாலும், மலையகப் பகுதிகளில் வீடமைப்பு திட்டங்கள் இந்த நான்கு அறைகளுக்குள்ளே லயங்களினாலே கட்டமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அபிவிருத்தி மலையக மக்கள் வாழ்க்கைத் தரத்தில் சார்பு நிலையற்று சீர்குலைந்து காணப்படுகின்றது.

### அபிவிருத்தியில் அனைவரையும் உள்ளீர்க்க என்ன செய்ய வேண்டும்?

ஆண்,பெண்,இன,மத,மொழி மற்றும் கலாசார பாகுபாடு இல்லாமல் சகலரையும் உள்ளடக்கியதாகக் காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் இன, மத, மொழி மற்றும் வர்க்க வாதம் காரணங்களாலும் காலத்தை வென்று நீக்கக்கூடிய முறையில் தெளிந்து தீர்மானம் எடுக்க கூடிய ஆற்றல் இல்லாத தன்மையினாலும், ஊழல்களாலும்,வினைத்திறனற்ற நிர்வாகக் கட்டமைப்புகளினாலும் திறமைக்கு முதலிடம் கொடுக்காமல் சுயநலம் காணப்பட்டதாலும் திறனான மனித வளத்தை இடப்பெயர்வால் இழந்ததாலும் அபிவிருத்தியின் வளர்ச்சியை துரிதப்படுத்த முடியவில்லை. எனவே, சகலரையும் உள்ளீர்த்த அபிவிருத்தியே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அபிவிருத்தியின் பயன்களைப் பெறுபவர்களும் அதன் பங்குதாரர்களும் சகலரும் உள்ளீர்க்கப்பட வேண்டும். ஒரு சாரார் மாத்திரம் அதன் பயன்களைப் பெறுவதில் இருந்தும் ஒரு சாரர் மாத்திரம் அதன் பங்குதாரர்களாக இருப்பது நிராகரிக்கப்பட்டு சகலரையும் அதில் உள்ளீர்ப்பதிலே அபிவிருத்தி என்பது நிலை பெறும். அத்துடன், அரசியல் தலையீடுகள் புறக்கணிக்கப்பட்டு சகல பிரதேசங்களையும் அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பொருளாதார வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வாழும் மக்கள் இடையே ஒற்றுமை, புரிந்துணர்வு என்பன மேலோங்கி இருக்கும். இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் பொழுது மக்களுடன் இணைந்து மக்களுடைய பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளுடன் அபிவிருத்தி என்பது கட்டி எழுப்பப்படும் போது அபிவிருத்தி கால தேவைக்கேற்ப சாத்தியப்படும். ஆகவே, அபிவிருத்தியைத் தேவைப்படுகின்ற சமூகத்திற்கு அதை முதலில் நிலை நிறுத்தப்பட வேண்டும். என்பதே முக்கியமானது.

வாழ்க்கைத் தரத்தில் மாத்திரம் அபிவிருத்தியில் தங்கி விடாமல் ஏனைய அம்சங்களிலும் அபிவிருத்தியை எவ்வாறு நிலை நாட்டுவது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ளும் பொழுதே அபிவிருத்தி என்பது ஒரு நாட்டில் சாத்தியப்படும்.

திருமணத்திற்கு முன்னரான

# உளவளத்துணை எனும் எண்ணக்கருவும்

## தற்காலத்தில் அதன் அவசியமும்



வி.கிருஷாந்தி
1ஆம் வருட
உளவளத்துணை
மாணவி,
NISD.

இன்றைய நவீன உலகில் மனிதன் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறான். அவற்றை வெற்றி கொள்ள உதவும் ஒரு சாதனமாக உளவளத்துணை காணப்படுகிறது. உளவளத்துணை என்பது நபர் ஒருவர் தனது தனிப்பட்ட, சமூக மற்றும் உணர்ச்சி சார்ந்த சிக்கல்களைத் தீர்க்கும் நோக்குடன், நம்பிக்கையுள்ள உறவின் அடிப்படையில், உளவியல் நிபுணரின் வழிகாட்டுதலுடன் வழங்கப்படும் ஆலோசனைக் கொள்கை ஆகும். இதனை British Association for Counselling and Psychotherapy (BACP) “உளவளத்துணை என்பது நம்பிக்கைக்குரிய மற்றும் நோக்கமுடைய உறவில், நபர் ஒருவர் தம்மைப் பற்றி உணர்வு, சிந்தனை, நடத்தை முறைகளை ஆராய, புரிந்துகொள்ள, மற்றும் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த உதவும் உளவியல் சார்ந்த செயல் முறையாகும்” என வரையறுத்துள்ளது.இங்கு குறித்த நபர் தனது பிரச்சினைக்குத் தானாகத் தீர்வு கண்டறிவதற்கான ஒரு வழிகாட்டுதலே நடைபெறுகிறது. இது நபரின் வாழ்நிலை மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டதது. ஆரம்பக் காலம் முதலே வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல் போன்ற முறைகளில் இது மேற்கொள்ளப் பட்டது. உளவியலில் துறை இதனைத் தனது உப பிரிவாக 1945களில் உள்வாங்கிய பின்னரே உலகெங்கும் இதன் பரவல் வியாபித்தது. ஆனால், இன்றும் எமது சமூகத்தில் counselling என்று சொன்னால் “அது பைத்தியத்திற்கு வைத்தியம் செய்யும் முறை என்ற தப்பான கண்ணோட்டமே காணப்படுகிறது. இந்த நிலை மாறினால் எமது மக்களும் உள நன் நிலையுடன் நீண்ட காலம் மகிழ்வுடன் வாழலாம்.”

உளவளத்துணையானது, பல உப பிரிவுகளாகப் பிரிந்து தன் சேவையை மக்களுக்கு வழங்குகிறது. அவற்றுள் தனிநபர் உளவளத்துணை. திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை, குடும்ப உளவளத்துணை,கல்வி உளவளத்துணை, தொழில்முறை உளவளத்துணை என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இதில் திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை என்பது திருமண வாழ்வில் இணைந்து கொள்வதற்கு முன்னராக தம்பதியினர் இருவரும் தங்களது எதிர்கால வாழ்வினை எவ்வாறு திட்டமிட்டுக் கொள்வது,திருமண வாழ்வில் காணப்படுகின்ற சவால்களை எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வது, மகிழ்ச்சிகரமானதும் திருப்திகரமானதும் நிலையானதுமானதோர் குடும்ப வாழ்வினை எவ்வாறு திட்டமிட்டுக் கொள்வது என்பன பற்றிய ஒரு சிறந்த வழிகாட்டலினை வழங்கும் செயற்பாடு ஆகும். இதனை American Association for Marriage and Family Therapy (AAMFT) யானது “திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை என்பது, ஒரு ஜோடி திருமண வாழ்க்கைக்குத் தயாராகுவதற்காக வழங்கப்படும் உளவியல் ஆலோசனை ஆகும். இது அவர்களது தொடர்பு திறனை மேம்படுத்தவும், உறவிற்கு உரிய நிஜமான எதிர்பார்ப்புகளை உருவாக்கவும், சிக்கல் தீர்வு முறைகளை வளர்க்கவும் உதவுகிறது” என வரையறுத்துள்ளது. 1960-70களில் திருமண/குடும்பம் சார்ந்த ஆலோசனைகளும் வளர்ச்சி பெற தொடங்கியது. 1990-2000 உலகளாவிய மனநல விழிப்புணர்வுடன், திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை ஒரு பிரதான பிரிவாக உயர்ந்தது. 1970களில் மேற்கத்திய நாடுகளில் ‘premarital education’ என்ற கருத்து உருவானது. 1980களில் இருந்து மத்திய மற்றும் தென் ஆசிய நாடுகளில் இது அறிமுகமானது.இந்நாள் வரை உளவளத்துணையாளர்கள், திருமணத்திற்கான உளவளத்துணையை ஒரு தடுப்புச் செயல்முறையாக (preventive approach) பயன்படுத்துகிறார்கள். Sanjana Gupta (2021) என்பவருடைய What is premarital counseling? என்ற ஆய்வானது திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை என்றால் என்ன? அதன் வகைகள் எவை? அதில் உளவளத்துணையாளர்கள் பிரயோகிக்கும் சிகிச்சை முறைகள் பற்றிய அறிவை தருகிறது. மேலும், பலரும் இதன் தன்மை, நன்மை, சமகால போக்கு தொடர்பில் பல ஆய்வுகளை நடத்தியுள்ளனர். இவ்வாறு பல கொள்கைகள், கோட்பாடுகளைக் கொண்டு வளர்ந்து வரும் இச் சேவை எமது நாட்டு மக்களுக்கும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இத் திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை தொடர்பான தெளிவும் புரிதலும் எம் சமூகத்தின் மத்தியில் அதிலும் மிகக் குறிப்பாகத் திருமண வாழ்விற்குத் தயாராகும் இளைஞர் மற்றும் யுவதிகளிடத்தில் மிகவும் அவசியமானதாகும்.

இந்நாளில், திருமண வாழ்வு பலருக்கு சவாலாக மாறியுள்ளது. விவாகரத்து விகிதம், தவறான குடும்ப பிணைப்பு, மன அழுத்தம் மற்றும் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரிக்கும் சூழலில், திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை (Pre-marital Counselling) என்பது தவிர்க்க முடியாத தேவையாக விளங்குகிறது. இலங்கையின் 2020 கணக்கெடுப்பின் அடிப்படையில், 10 திருமணங்களில் 1 விவாகரத்துடன் முடிகின்றது, பெரும்பாலானவை திருமணத்திற்கு முதல் மூன்று ஆண்டுகளில் நடைபெறுகின்றன. United Nations Population Fund (UNFPA, 2020) தெற்காசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா வில் மேற்கொண்ட ‘திருமண நிலை ஆய்வு’ முடிவில் 60% ஜோடிகள் உறவுச் சிக்கல்களுக்கு முன் கருத்துரையளிப்பு பெற்றிருந்தால், விவாகரத்துக்கு செல்லாதிருந்திருப்போம் எனக் கூறியுள்ளனர். மேலும் Sri Lanka Mental Health Report (2022) படி, “தற்கொலை செய்துகொண்டோரில் 20% பேர் திருமண சிக்கல்கள் காரணமாகவே தற்கொலைக்கு முயற்சி செய்தனர்” இவ்வாறு உலகெங்கும் இன்று மக்கள் அதிக விவாகரத்து பெறவும், குடும்ப வாழ்வில் நிம்மதி இன்றிய நிலையிலும்,போதை பொருளுக்கு அடிமையாதல், தற்கொலை, கொலை போன்ற நடத்தைகளை வெளிப்படுத்த திருமண உறவில் தம்பதிகள் இடையே நம்பிக்கையின்மை புரிந்துணர்வு இன்மை, முற்போக்கான எண்ணம்,முறையான வாழ்க்கை திட்டமிடலின்மை போன்ற காரணிளே காரணமாகும்.

Marianne McGoldrick (2022) முன்வைத்த The 8 Questions premarital counselors always Ask எனும் கட்டுரையானது திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை ஆய்வாளர்கள் எப்போதும் கேட்கும் 8 கேள்விகள் பற்றி கூறியுள்ளது. அவையாவன,

1. உங்களுடைய துணையிடம் அல்லது உறவிடம் நீங்கள் பொருந்திக் கொள்ளும் விடயம் என்ன?
2. திருமண உறவின் போது குழந்தை பற்றிய அபிப்பிராயம் என்ன?
3. உங்களுடைய குடும்பத்திடம் எவ்வாறு உங்கள் உறவைக் கையாள்வீர்கள்?
4. ஆன்மீகம் பற்றிய இருவரின் கருத்து.
5. உடலுறவு பற்றிய இருவரின் கருத்து.
6. செலவு மற்றும் சேமிப்பு பற்றிய கருத்து
7. வருமானத்தை இருவரும் சேர்ந்தா? அல்லது தனியாகவா? மேற்கொள்ளப் போகின்றீர்கள்?
8. எவ்வாறு நீங்கள் உங்கள் எதிர்கால முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்?

மேற்கூறிய கேள்விகளுக்கு இருவரிடமும் நேர்மறையான ஒற்றுமையான சிந்தனையிலான பதில்கள் காணப்படுமிடத்து திருமணத்திற்கு பின்னரான வாழ்க்கை செழிப்பாகவும் மகிழ்வாகவும் அமையக்கூடும்.

மேற்கத்திய நாடுகளில் திருமணத்திற்கு முன்பு பொருளாதார நிலைமை,தொடர்பாடல்,நம்பிக்கைகளும் பெறுமானங்களும்,பாலியல் கவர்ச்சி,குடும்ப உறவுகள், முடிவெடுத்தல், கல்வி மற்றும் தொழில் சூழல் என்பன பற்றி அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மாறாக எமது சமூகத்தில் சாதி, அந்தஸ்து, ஜாதகப் பொருத்தம், வரதட்சணை போன்றவற்றில் தான் திருமணத்திற்கு முன்பு கவனம் செலுத்தப்படுகிறது. எனவேதான் எதிர்காலம் குறித்து எந்த ஒரு திட்டமும் முழுமையான புரிந்துணர்வும் இன்றி இருவர் திருமண வாழ்வில் இணையும் போது பல பிரச்சினைகள் எழக்கூடும்.

திருமணத்திற்கு முன்பு உளவளத்துணை பெற வேண்டியதன் அவசியமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

**1. தனிநபர் எதிர்பார்ப்புகளின் ஒழுங்குமுறை:**

திருமணம் என்பது இரு நபர்களின் வாழ்விலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இருவரும் திருமணத்திலிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை கருத்தில் கொள்ளாமல் திருமணம் மேற்கொள்ளும்போது, எதிர்காலத்தில் உறவில் வெடிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் குடும்பத்தை விரைவில் உருவாக்க விரும்புகிறார், மற்றொருவர் தொழிலில் நிலை பெற விரும்புகிறார் என்றால் எதிர்மறை உணர்வுகள் உருவாகலாம்.

**2. தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துதல்:**

சிறந்த தொடர்பாடல் என்பது உறவின் அஸ்திவாரமாகும். கலகங்களும் தவறான புரிதல்களும் பெரும்பாலும் தொடர்பாடல் குறைவினால் தான் ஏற்படுகின்றன.

உதாரணமாக ஒருவரது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நிலை, அல்லது தொடர்ந்து குற்றம்சாட்டும் நிலை.

**3. மீள்பார்வை மற்றும் எதிர்காலத் திட்டமிடல்:**

ஒருவருக்கு ஒருவர் தங்களை அறிந்துகொள்வதோடு, எதிர்கால வாழ்வுத் திட்டங்களைப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது. குழந்தை பெற்றெடுப்பது பற்றிய முடிவுகள், வேலைகள் தொடர்பான அணுகுமுறைகள், மதம் மற்றும் பணம் பற்றிய கருத்துக்கள்.

**4. மனநிலை மற்றும் நலன் குறித்த புரிதல்:**

மனநல சிக்கல்கள், முன்னர் ஏற்பட்ட மனநல கோளாறு பற்றி, குடும்ப வரலாறு போன்றவை பற்றி தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். ஒருவருக்கு முதற்கட்ட மனச் சோர்வு (depression) வரலாறு இருந்தால், திருமணத்திற்குப் பின்னர் துணையின் அவருக்கு பங்கு முக்கியமானதாக இருக்கும்.

**5. பணநிலை மேலாண்மை தொடர்பான புரிதல்:**

பணம் தொடர்பான முடிவுகள், செலவுகள், சேமிப்பு, கடன், சொத்துக்கள் போன்றவை இரண்டு நபர்களுக்குள் இடைவெளி ஏற்படுத்தக்கூடியவை. ஒருவருக்கு வீட்டுக் கடன் இருக்க, மற்றவர் அதை மறைத்து வைத்திருப்பது நம்பிக்கையைப் பாதிக்கலாம். Counselling வழியாக இருவரும் பணம் பற்றிய நம்பிக்கைகள், முன்னிலை, எதிர்பார்ப்புகள் பற்றி பேச அறிய வாய்ப்பு கிடைக்கும்.

**6. மத மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளைச் சமன்செய்தல்:**

மதம், பாரம்பரியம், கலாச்சாரம், சமய நிகழ்வுகள் போன்றவை இருவரும் வேறுபட்ட அடையாளங்களில் இருந்தால், எதிர்காலத் திருமண வாழ்வில் சிக்கல்களைக் காணலாம்.

(வியாழக்கிழமை தொடரும்...)

பெங்களூர்

### 14 வயது மகளுடன்

# ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட தாய்

தனது 14 வயது மகளுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட தாய் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம், கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இடம்பெற்றுள்ளது.



அங்கு 38 வயது பெண் வசித்து வருகிறார். இவருக்கு 14 வயதில் ஒரு மகள் இருக்கிறார். அந்த பெண்ணின் கணவர் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு அவரை பிரிந்து சென்றுவிட்டார். இதனால் அந்த பெண், தனது மகளுடன் தனியாக வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அவரது மகள் பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் பாடசாலையில் தற்போது 9ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்த நிலையில், அவரது பாடசாலையில் பாலியல் வன்கொடுமை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. அதில் அந்த மாணவி பங்கேற்று அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார். அதாவது, கடந்த 6 ஆண்டுகளாக தன்னை தனது தாயே பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார். இதைக்கேட்டு ஆசிரியைகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பின்னர் அவர்கள் இதுபற்றி பள்ளியின் தலைமை ஆசிரியர் மூலமாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன்பேரில் பாடசாலைக்கு வந்த பொலிஸார் அந்த மாணவியிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில் அந்த மாணவி தனக்கு நேர்ந்த கொடுமைகளை கூறி கதறி அழுதாள். இதையடுத்து, பொலிஸார் அந்த மாணவியின் தாயை பிடித்து விசாரித்துள்ளனர். விசாரணையில், திருமணத்துக்கு பிறகு கணவனுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தான் தனது மகளுக்கு கற்றுக்கொடுத்ததாக பகீர் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இதையடுத்து, பொலிஸார் அந்த சிறுமியின் தாயை கைது செய்தனர். தொடர்ந்து அவர் மீது வழக்குப்பதிவு செய்து பொலிஸார் விசாரித்து வருகிறார்கள். மகளுடன், தாய் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தெலுங்கானா

### இரசாயன தொழிற்சாலையில்

# வெடி விபத்து; 42 பேர் பலி

தெலுங்கானா மாநிலம் மடக் மாவட்டம் பஷ்யல்ராம் பகுதியில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 42 ஆகதிகரித்துள்ளது.



திங்கட்கிழமை (30) அன்று இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பிற்கான இரசாயன கலவை எந்திரத்தில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த 10 பேர் உயிரிழந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். இந்த நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது மேலும் அதிகரித்துள்ளது. அதன்படி தீ விபத்தில் 37 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. மேலும் தீயணைப்புத்துறையினர் தீவிரமாக மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது.

சீனா/இந்தியா

### எல்லை பிரச்சினை விவகாரம்: இந்தியாவுடன் பேச

# சீனா தயார்

இந்தியாவுடன் எல்லை பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,




“எல்லை நிர்ணயம் மற்றும் மேலாண்மை தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு சீனா எப்போதும் தயாராக உள்ளது. இதன்மூலம் இரு தரப்பும் சேர்ந்து எல்லையில் அமைதியை உறுதிப்படுத்தவும், எல்லைத் தாண்டிய ஒத்துழைப்புகளை ஊக்குவிக்கவும் முடியும். இந்தியா-சீனா சிறப்புப் பிரதிநிதிகளின் 23 சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும் தீர்வு எட்டப்படாதது குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது.

“சீனா-இந்தியா இடையேயான எல்லைப் பிரச்சினை சிக்கலானது. அதைத் தீர்க்க நேரம் எடுக்கும். இதில் முன்னேற்றம் என்னவென்றால் இரு நாடுகளும் ஏற்கெனவே முழுமையான தகவல்தொடர்புக்கான பல்வேறு மட்டங்களில் வழி முறைகளை நிறுவியுள்ளன.

எல்லையில் அமைதியைப் பேண இரு நாடுகளும் ஒரே திசையில் செயல்பட்டு, தொடர்ந்து, தொடர்பில் இருக்கும் என்று நம்பிக்கை உள்ளது” என்றார்.

ஆபிரிக்கா

# பஸ் விபத்தில் 40 பேர் பலி

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு தான்சானியா நாட்டில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர்.



கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு தான்சானியா நாட்டின் கிளிமஞ்சாரோ மாகாணம் மோஷி நகரில் இருந்து தங்கொ நகருக்குத் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க 50க்கும் மேற்பட்டோர் கடந்த சனிக்கிழமை (29) இரவு சொகுசு பஸ்சில் சென்றுகொண்டிருந்தனர்.

நெடுஞ்சாலையில் சபசபா என்ற பகுதியில் பஸ் சென்றுகொண்டிருந்தபோது சாலையில் எதிரே மற்றொரு பஸ் வந்துகொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த பஸ்சின் டயர் வெடித்தது. இதனால், கட்டுப்பாட்டை இழந்த பஸ் எதிரே வந்த சொகுசு பஸ் மீது மோதியது. இந்த கோர விபத்தில் 2 பஸ்களும் தீப்பற்றி எரிந்தன.

இரு பஸ்களில் இருந்து மொத்தம் 30 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். 40 பேர் உயிரிழந்தனர்.

காசா

### காசாவுக்கு

# அமெரிக்கா உதவி

அமெரிக்க ஆதரவு பெற்ற நிவாரண உதவி பொருட்கள் காசாவுக்குள் கொண்டு செல்லப்பட்டன.

இது பற்றிய வீடியோ ஒன்றை வெள்ளை மாளிகையின் ஊடக செய்தி தொடர்பாளரான கரோலின் லீவிட் பகிர்ந்துள்ளார்.

அதில் பாலஸ்தீனிய மக்கள் “ட்ரம்பை நாங்கள் நேசிக்கிறோம். டொனால்டை நேசிக்கிறோம்” என கோஷங்களை எழுப்பினர். இதேபோன்று டிரம்ப் வெளியிட்ட பதிவு ஒன்றையும் லீவிட் பகிர்ந்து உள்ளார். அதில், காசாவில் ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். பணய கைதிகளை மீட்டு கொண்டு வருவோம் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதனால் ஹமாஸ் அமைப்பினரிடம் சிக்கியுள்ள பணய கைதிகள் மீட்கப்படும் சாத்தியம் அதிகரித்து காணப்படுகிறது.

### இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# இன்று ஆரம்பமாகும் ஒருநாள் தொடர்



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இன்று புதன்கிழமை(2) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையணியைப் பொறுத்தவரையில் அண்மைய காலங்களில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பலமாகக் காணப்படுகின்ற நிலையில் பலத்த சவாலை பங்களாதேஷ் எதிர்கொள்கின்றது.

டில்ஷான் மதுஷங்க குழாமுக்குத் திரும்பியுள்ள நிலையில் அவர் அவதானிக்கப்படுவதுடன், எஷான் மலிங்கவின் பெறுபேறுகளும் அவதானிக்கப்படும். தவிர மிலான் ரத்னாயக்க காயத்திலிருந்து மீண்டால் அவரையும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இலங்கை பரிசோதிக்கும்.

மறுபக்கமாக மெஹிடி ஹஸன் மிராஸ் அணியை மீட்டெடுக்க வேண்டியதுடன், துடுப்பாட்ட வரிசையில் தனக்கு நிரந்தரமான இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. தவிர தனது பந்துவீச்சையும் மேம்படுத்த வேண்டியுள்ளது.

மீண்டும் குழாமுக்குத் திரும்பிய லிட்டன் தாஸ் மற்றும் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, தௌஹிட் ஹிரிடோய் உள்ளிட்டோர் பெரிய இனிங்ஸ்களை ஆடினாலே இலங்கைக்கு சவாலை வழங்கலாம்.

தஸ்கின் அஹ்மட், முஸ்தபிசூர் ரஹ்மானின் மீள்வருகை பங்களாதேஷுக்கு மேலதிக பலத்தை வழங்குகின்றது.

### கழக உலக கிண்ணத்திலிருந்து

# வெளியேற்றப்பட்ட சிற்றி, இன்டர்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியனான மன்செஸ்டர் சிற்றி மற்றும் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் ஆகியன வெளியேற்றப்பட்டுள்ளன.




ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவில் செவ்வாய்க்கிழமை (01) காலை நடைபெற்ற சவுதி அரேபியக் கழகமான அல்-ஹிலாலுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 3-4 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.

சிற்றி சார்பாக பெர்ணார்டோ சில்வா, எர்லிங் ஹலான்ட், பில் பொடென் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அல்-ஹிலால் சார்பாக மார்கோஸ் லியனார்டோ இரண்டு கோல்களையும், மல்கொம், கலிடு குலிபலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, பிரேஸிலியக் கழகமான புளூமினிஸிடம் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றே இன்டர் தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

### இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட்:

# இங்கிலாந்தை வெல்லுமா இந்தியா?

இங்கிலாந்து-இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது பேர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்ற நிலையில் இப்போட்டிக்கான இந்திய அணியில் மாற்றங்கள் இருக்குமென நம்பப்படுகின்றது.

இப்போட்டிக்கான ஆடுகளமும் முதலாவது போட்டியானதன் போன்று தட்டையானதாகவே துடுப்பாட்டவீரர்களுக்குச் சாதகமானதாகவே இருக்குமென என நம்பப்படுகின்றபோதும், ஆடுகளத்தில் கீழ்ப்பகுதியானது இங்கிலாந்தில் தற்போது நிலவும் வெப்பமான வானிலை காரணமாக வறட்சியாக இருக்குமெனக் கூறப்படுகின்ற நிலையில், போட்டியின் நான்காம் மற்றும் ஐந்தாம் நாள்களில் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு சுழற்சியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில், இரவீந்திர ஜடேஜாவுக்கு மேலதிகமாக இரண்டாவது சுழற்பந்து வீச்சாளரை இந்தியா களமிறக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு, முதலாவது போட்டியில் பின்வரிசையில் விக்கெட்டுகள் வரிசையாக பறிபோன நிலையில், குல்தீப் யாதவ் இல்லாமல் துடுப்பெடுத்தாடக்கூடிய வொஷிங்டன் சுந்தரை பிரசீத் கிருஷ்ணாவுக்குப் பதிலாக களமிறக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர ஷர்துல் தாக்கூருக்குப் பதிலாக நிதிஷ் குமார் ரெட்டி களமிறங்கக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுபக்கமாக முதலாவது போட்டியில் விளையாடிய அதேயணியே இப்போட்டியிலும் இங்கிலாந்து சார்பாகக் களமிறங்கவுள்ளது. எவ்வாறெனினும் குழாமில் ஜொஃப்ரா ஆர்ச்சர் இடம்பெற்றிருக்கும் நிலையில் கிறிஸ் வோக்ஸ் தனதிடத்தை தனது சொந்த மைதானத்தில் நிலைநிறுத்த வேண்டியுள்ளது.

### பேஸ்பால் ஆண்கள் சாம்பியன்ஷிப்பை

# விமானப்படை வென்றது




முப்படை வீரர்களின் திறன்களை வளர்க்கும் நோக்கத்திற்காக பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு கவுன்சிலால் ஏற்பாடு செய்யப்பட்ட 13வது பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு போட்டியின் சிறப்பு நிகழ்வான ‘பேஸ்பால்’ போட்டி சமீபத்தில் தியகமவில் உள்ள ஜப்பான் இலங்கை நட்புறவு பேஸ்பால் மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இந்தப் போட்டியில், இலங்கை விமானப்படை பேஸ்பால் அணி திறமையை வெளிப்படுத்தி, இறுதிப் போட்டியில் இலங்கை இராணுவத்தை 4-2 என்ற கணக்கில் தோற்கடித்து வரலாற்றில் முதல் முறையாக 13ஆவது பாதுகாப்பு சேவைகள் பேஸ்பால் சாம்பியன்ஷிப்பை வென்றது. சிறந்த வீரருக்கான விருதை விமானப்படையின் கோப்ரல் சமீர சதருவன், அவர்களும் சிறந்த பந்து வீச்சாளர் விருதை விமானப்படை முன்னணி விமானப்படை வீரர் சந்திஷ மீகோட மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை கோப்ரல் சிந்தக இந்துநில் ஆகியோர் வென்றனர்.

இந்தப் போட்டியின் விருது வழங்கும் விழாவிற்கு பிரதம விருந்தினராக இலங்கை கடற்படையின் சேவைகள் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஜி.எஸ்.டி.வீரசூரிய கலந்து கொண்டனர், அதே நேரத்தில், இலங்கை விமானப்படை பேஸ்பால் அணியின் தலைவர் எயார் கொமடோர் சந்திமால் ஹெட்டாராச்சி, இலங்கை இராணுவத்தின் விளையாட்டு பிரிவு பணிப்பாளர் பிரிகேடியர் கே.ஏ.டி.ஆர்.சி.கன்னங்கர மற்றும் மூத்த அதிகாரிகள் மற்றும் முப்படை வீரர்கள் கலந்து கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 02, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.